2013 மே 14]

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய வட்டம் உருவாக்குவதற்கு அரசு நிர்ணயித்திருக்கின்ற அளவுகோல்களை மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பகுதி நிறைவு செய்கின்ற காரணத்தினாலே, தூத்துக்குடி மாவட்டம், கயத்தாரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் ஏற்படுத்துவதற்கு உரிய முன்மொழிவுகள் பெறப்பட்டு, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி மக்களின் நீண்ட காலக் கனவை நனவாக்கி, ஆவன செய்யப்படும் என்று உறுதியளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழகத்தின் பொற்கால முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் தொகுதி மக்கள், கார் உள்ளளவும், கடல் உள்ளளவும் நன்றிக்கடன்பட்டிருப்போம் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகச் சொல்லி, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 498, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

498—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***22760—திரு. அ. பாஸ்கர்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, சொரங்குப்பன்புதூரில் உள்ள தொடக்கப் பள்ளியைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தருமபுரி தொகுதி, சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, சொரங்குப்பன்புதூரில் உள்ள தொடக்கப் பள்ளி, நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்யவில்லை. எனவே, இப்பள்ளியைத் தற்போது நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, நல்லம்பிள்ளை ஒன்றியம், சொரங்குப்பன்புதூரில் உள்ள தொடக்கப் பள்ளியில் 72 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இவர்கள் நடுநிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்றால், 3 கிலோ மீட்டர் தூரமுள்ள பள்ளிக்குத்தான் செல்ல வேண்டிய நிலை உள்ளது. எனவே, இந்தப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டி, தரம் உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 கிலோ மீட்டர் தொலைவில் ஒரு தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி என்றும், 5 கிலோ மீட்டர் தொலைவில் ஓர் உயர்நிலைப் பள்ளி என்றும், 8 கிலோ மீட்டர் தொலைவில் ஒரு மேல்நிலைப் பள்ளி என்றும், ஓர் இலக்கை நிர்ணயித்துள்ள ஒரே அரசு தமிழக அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதைச் செய்தவர் தமிழகத்தினுடைய*

2013 மே 14]

தன்னிகரில்லாத முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதி, சொரங்குப்பன்புதூரில் 1 முதல் 5 வகுப்புகள் வரை உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் 72 மாணவ, மாணவியர் பயில்கின்றனர். ஆனால், ஐந்தாம் வகுப்பில் 13 மாணவ, மாணவியர் மட்டுமே உள்ளனர். இத்தொடக்கப் பள்ளியிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியும், 2.5 கிலோ மீட்டர் தொலைவில் பங்குநத்தம்கொட்டாய் அரசு மேல்நிலைப் பள்ளியும், 3 கிலோ மீட்டர் தொலைவில் ஏலகிரி அரசு மேல்நிலைப் பள்ளியும் இயங்கி வருகின்றன. மேலும், சொரங்குப்பன்புதூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், ஐந்தாம் வகுப்பில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 13 மட்டுமே உள்ளதாலும், போதிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்பதனாலும் இந்த ஆண்டு அதற்குரிய வாய்ப்புகள் இல்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.

திரு. அ. பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, நல்லம்பிள்ளை ஒன்றியம், தேனாமரத்துப்பட்டி நடுநிலைப் பள்ளி சுமார் 10 ஆண்டுகளாக நடுநிலைப் பள்ளியாகவே இருந்து வருகிறது. அந்தப் பள்ளியில் 122 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். இப்பள்ளிக்கு 3 ஏக்கர் நிலம் உள்ளது. இப்பள்ளியைத் தரமுயர்த்துவதற்காக ஒரு இலட்சம் ரூபாய் பணமும் கட்டியுள்ளார்கள். எனவே, இந்தப் பள்ளியைத் தரமுயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனக் கேட்டுக் கொண்டு, தருமபுரி கல்வி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, அரூரை மையமாகக் கொண்டு, கல்வி மாவட்டத்தை அங்கு அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி விட்டு கேள்வியை, மாறி, மாறி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். இருந்தபோதிலும், அவருடைய கேள்விகளையெல்லாம் துறை ஆய்வு செய்து, அந்த ஆய்வை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய முறையிலே பரிசீலனை செய்யப்படும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) புதிய மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் 4 அறிக்கைகளை அளிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். மேலும், அமர்ந்துகொண்டு அறிக்கைகளை அளிப்பதற்கு அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

முற்பகல் 11–15

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களின் வளர்ச்சியை வைத்தே ஒரு நாட்டின் வளர்ச்சியை அளவிட முடியும் என்பதை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், மகளிர் சிறப்பு அதிரடிப் படை, மகளிர் காவல் நிலையம், மகளிர் எழுத்தறிவுத் திட்டம், மகளிர் தொழில் முனைவோர்களுக்கான பிரத்யேக தொழிற்பேட்டைகள், மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலம் கடன் உதவிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் திட்டம், பெண்களின்